[2008 ஏப்ரல் 11

91—

நெல் ரகங்கள்

***23069—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல் சாகுபடியை அதிகரிக்கும் வகையில் குறுகிய கால நெற்பயிர் இரகங்களை அறிமுகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறைந்த வயதுடைய நெல் இரகங்கள் தமிழ்நாட்டில் குறுவை மற்றும் நவரைப் பட்டங்களில் பயிரிடப்படுகின்றன. சமீபத்தில் 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கோயம்புத்தூர் ஆர்.எச். 3 என்ற புதிய வீரிய ஒட்டு நெல் இரகம் 115 நாட்கள் வயதுடையது. சராசரியாக எக்டேருக்கு 7 டன் மகசூல் அளிக்கவல்லது. மேலும், ஆடுதுறை 43, ஆடுதுறை 45, ஆடுதுறை 47, ஆடுதுறை 48 போன்றவையும் குறைந்த வயதுடைய புதிய இரகங்கள் ஆகும். தமிழ்நாட்டில் அதிக அளவில் பயிரிடப்பட்டுவரும் அம்பாசமுத்திரம் 16, ஆடுதுறை 36, கோயம்புத்தூர் 47 போன்ற இரகங்களும் குறைந்த வயதுடைய உயர் விளைச்சல் இரகங்களாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகம் விவசாயத்தையே நம்பியிருக்கிற மாநிலம் ஆகும். எனவே, இங்கே விவசாயிகள் கருதுவது, ஒரு எக்டேருக்கு 9 டன் நெல் உற்பத்தி செய்கிற வகையிலும், அதேசமயத்திலே, 75 நாட்களிலே, குறுகிய காலத்திலே நெற்பயிர் அறுவடைக்கு வருவதைப்போன்ற பயிர்களை உருவாக்க வேண்டும் என்று விவசாயிகள் கருதுகிறார்கள். எனவே, இதுபோன்ற பயிர்களை நம்முடைய தமிழக அரசாங்கம் ஆராய்ச்சி செய்ய முன்வருமா என்று கேட்டு, ஏற்கெனவே எங்கள் ஊர் பெயரைக் கொண்ட செங்கல்பட்டு சிறுமணி, கிச்சிலி போன்ற நெற்பயிர்களை இப்போது யாருமே பயிரிடுவது இல்லை. அவற்றையெல்லாம் ஒட்டு இரகங்களாகப்

2008 ஏப்ரல் 11]

பயிரிடுவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்போது ஏ.டி.டி. 36, 37, 42, 43, ஏ.டி.டி.ஆர். 45, ஏ.டி.டி.ஆர்.எச். 1, ஏ.எஸ்.டி. 16, ஏ.எஸ்.டி. 17, ஏ.எஸ்.டி. 18, ஐ.ஆர். 36, ஐ.ஆர். 50, ஐ.ஆர். 64 இந்த இரகங்கள்தான் தற்போது 105 நாட்கள் முதல் 110 நாட்களில் விளைச்சல் தரக்கூடிய இரகங்களாக இருக்கின்றன. மத்திய கால இரகங்களாக ஏ.டி.டி. 45, 38, 39, ஏ.எஸ்.டி. 19, கோ.ஆர்.எச். 2, இவைதான் 120 நாட்களிலிருந்து 130 நாட்கள் வரை விளைச்சலுக்கு வரக்கூடியவையாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு எழுப்பிய அந்த வினாவைப்போல் நம்முடைய தமிழ்நாட்டினுடைய வேளாண்மைப் பல்கலைக்கழகம் குறுகிய காலத்திலே விளைச்சல் தரக்கூடியதும், அதுவும் நீர் மேலாண்மைப் பற்றியும் அறிந்து, ஒவ்வோர் ஆண்டும் தான் கண்டுபிடித்த புதிய ஆலோசனைகளை, விதைகளை, இரகங்களை வெளியிட்டு வருகிறது. ஆகவே, தற்போது இந்த நிலைதான் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய காலத்திலே அதிக மகசூலைக் கொடுக்கக்கூடிய நெற்பயிர்களைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளையும், அதேபோன்று பல்வேறு பயிர் இரகங்களைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளையும் அரசு எடுக்குமா என்பதை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் பல்வேறு நெல் இரகங்களைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள நெல் இரகங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது, குறுகிய காலத்திலே அதிக மகசூலைக் கொடுக்கக்கூடிய நெற்பயிர்களையும் ஊக்குவிக்க வேண்டும். இப்போது சினிமா கலைஞர்கள் முதல் நாட்டியக் கலைஞர்கள் வரை ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு விருதுகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அதுபோன்று, நெல் உள்ளிட்ட பல்வேறு பயிர் இரகங்களைக்

கண்டுபிடிப்பவர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் சிறப்பு விருதுகளை வழங்குவதில்லை என்ற ஏக்கம் விவசாயிகள் மத்தியிலும், விவசாயத்திலே திறமையாகச் செயல்படுகிறவர்கள் மத்தியிலும் இருக்கிறது. இதுபோன்ற சிறப்பு விருதுகளை நம்முடைய தமிழக அரசாங்கம் விவசாயிகள் மற்றும் விவசாயத்தை ஊக்குவிப்பதற்கும், ஆராய்ச்சியை மென்மேலும் வளர்ப்பதற்குமான நோக்கிலே விவசாயிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் வழங்குவதற்கு முன்வருமா என்று தங்கள்மூலம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது நாற்று விட்டாலே 22 நாட்களுக்கு மேலேதான் எடுத்து நடுவோம். ஆனால், இந்தச் செம்மை நெல் சாகுபடி என்ற புதிய முறையிலே இப்போது ஒரு பயிர் நடுகின்ற அந்த முறையில், புதிய தொழில்நுட்பத்தை வழங்கி, கடந்த ஆண்டு 56,600 விவசாயிகளுக்குப் பயிற்சி தந்து, 11,300 எக்டேர்களில் இது பயிர் செய்யப்பட்டது. இதில் நல்ல விளைச்சல் கிடைக்கிறது. நாம் சாதாரணமாக சம்பா, கார் நெல் இதையெல்லாம் பயிர் செய்தால், அதிகபட்சம் போனால் 2 டன்கூட ஒரு ஏக்கருக்கு வராது. எல்லா விவசாயிகளுக்கும் இது தெரியும். ஆனால், இந்த முறையிலே, செம்மை நெல் சாகுபடி முறையில் ஒரு எக்டேருக்குக் குறைந்தபட்சம் 10 டன், அதிக அளவிலே 14 டன் வரை கிடைக்கின்றது. ஆகவே, இந்தப் புதிய தொழில்நுட்பத்தின்மூலம் நல்ல விளைச்சல் வரக்கூடியதை கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தி, இந்த ஆண்டும் நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருப்பதைப்போல, பல்லாயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான ஏக்கர்களில் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நம்முடைய விருப்பத்திற்கு புதிய இரகங்களைக் கண்டுபிடிப்பது சாத்தியமல்ல. வேளாண்மைப் பல்கலைக்கழகம் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டுதான் 105 நாட்களிலிருந்து 110 நாட்கள் வரையுள்ள இரகங்களைக் கண்டுபிடித்து அவைதான் இப்போது குறைந்த நாட்களிலே விளைச்சல் தரக்கூடிய இரகங்களாக இருக்கின்றன.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் விருது வேண்டுமென்று சொல்கின்றார்கள். அவர் ஒரு புதிய இரகத்தைக் கண்டுபிடித்து,

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 ஏப்ரல் 11]

அதை வேளாண்மைப் பல்கலைக்கழகம், 'சபாஷ்' என்று பாராட்டு தெரிவித்தால், விருதுகள் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பகுதி விவசாயிகளையும் சென்றடையக்கூடிய வகையில், குறுகிய காலப் பயிர் பற்றிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சி ஆகியவற்றை விவசாயிகளுக்கு அளிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நன்னிலம் தொகுதியைச் சேர்ந்தவர். அவரே அந்தப் பிரச்சாரத்திலே ஈடுபட்டு விவசாயிகளை ஊக்குவிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

94—

மாணவர் விடுதி

38429-திரு. அ. தமிழரசு:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குப் புதிய விடுதி தொடங்குவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.